**செ.வெ.எண்:** **நாள்:12.09.2021**

## நாமக்கல் மாவட்டம்

**கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடைகோடி கிராமமான குண்டுனிநாடு மற்றும் சூக்கலாம்பட்டி ஊராட்சிகளில் அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி. சிங் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

------

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கடைகோடி கிராமமான குண்டுனிநாடு மற்றும் சூக்கலாம்பட்டி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அடிப்படை வசதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு (11-09-2021) அன்று ஆய்வு மேற்கொண்டார்.

கொல்லிமலை ஊராட்சி ஒன்றியம், குண்டுனிநாடு ஊராட்சி, அடுக்கம்புதுகோம்பை மற்றும் குண்டூர் நாடு ஊராட்சி, சூக்கலாம்பட்டி கிராமங்களில் பொதுமக்களிடம் கலந்துரையாடிய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து, சாலை வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு வசதி, ஜாதிச் சான்று, நீர்த்தேக்கம் குட்டை, அங்கன்வாடி கட்டிடம், மகளிர் சுய உதவிக்குழு கட்டிடம், புதிய வீடு வேண்டி, உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார். பொதுமக்களிடமிருந்து குறைகளை கேட்டறிந்த மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

மேலும் நடமாடும் வாகனத்தின் மூலம் முறையாக ரேசன் பொருட்கள் வழங்கப்படுவதையும், சுகாதார துறையின் மூலம் நடமாடும் மருத்துவ சிகிச்சை வாகனத்தின் மூலம் பொதுமக்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுவதையும் கேட்டு உறுதி செய்தார். 18 வயது நிரம்பிய அனைவரும் தடுப்பூசி போட்டுள்ளனரா என்றும், தடுப்பூசி போடாதவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, குண்டூர் நாடு ஊராட்சி, சூக்கலாம்பட்டி கிராமத்தில் உள்ள சமுதாயக் கூடத்தில் பொதுமக்கள் தங்களுக்கு வாக்குச்சாவடிகள் மிக தொலைவில் ஒதுக்கப்படுவதால் தேர்தல் நேரங்களில் வாக்குபதிவிற்கு செல்ல சிரமமாக உள்ளதாகவும், அதற்கு மாற்று ஏற்பாடாக அருகில் உள்ள வாக்குச்சாவடிகளில் வாக்களிக்க ஏற்பாடு செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை வைத்தனர். அக்கோரிக்கையினை ஏற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வட்டாட்சியரிடம் இது குறித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். அப்போது சாதிச்சான்று வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக சாதிச்சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

பின்னர், நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி ஊராட்சி ஒன்றியம், வரகூர் ஊராட்சியில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பள்ளி ஆசிரியர்களின் வருகை பதிவேடு, மாணவ, மாணவிகளின் வருகை பதிவேடு உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், பள்ளியில் வகுப்பறைகள், கணினி ஆய்வகம், ஆசிரியர்கள் அறை மற்றும் சுற்றுப்புற தூய்மை, குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது கொல்லிமலை வட்டாட்சியர் திரு.கிருஷ்ணன் வருவாய்த்துறை அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.